1994 நவம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 67, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

67—

மேட்டூர் தொகுதியில் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளை திறக்க நடவடிக்கை

**35551*-திருமதி செ. சுந்தராம்பாள் :

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதியில் மூடிக்கிடக்கும் மேட்டூர் டெக்ஸ்ட்டைல்ஸ், அலெக்ஸாண்டர் திரெட் என்னும் இரு தொழிற்சாலைகளையும் கூட்டுறவு முறையில் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலையினை கூட்டுறவு முறையில் திறக்க இயலாது. அலெக்ஸாண்டர் திரெட் நிறுவனம் இந்த மில்லின் ஒரு பகுதி ஆகும்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியில் கடந்த 9 ஆண்டுகளாக மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலையும், அதனுடைய தொடர்பான ஆலையான அலெக்ஸாண்டர் திரெட் கம்பெனியும் மூடிக்கிடக்கின்றன. அங்கே பணிபுரிகிற 2820 குடும்பங்கள் மிகவும் வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் மூடிய ஆலைகளைத் திறந்து தொழில்புரட்சியைச் செய்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து இந்த இரண்டு தொழிற்சாலைகளையும் திறப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை கடந்த 11-7-1990 அன்று திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட பிறகு இந்த ஆலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினையால் 2-7-1992 அன்று மீண்டும் மூடப்பட்டது. இந்த நூற்பாலைக்குக் கடன் உதவி அளித்தவர்கள் உயர்நீதிமன்றத்தில்

[1994 நவம்பர் 9

வழக்கு தொடர்ந்தனர். உயர்நீதிமன்றம் 2-7-93 அன்று கலைப்பு அதிகாரியை நியமித்து, அவர்களிடத்தில் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. எனவே, கலைப்பு அதிகாரியின் பொறுப்பில் இந்த ஆலை ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

68—

ஆறுகளில் தடுப்புச் சுவர் கட்டி மண் அரிப்பைத் தடுக்க நடவடிக்கை

***21511–திரு கி. தருமலிங்கம் :**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்அரிப்பைத் தடுப்பதற்கு ஜவ்வாது மலையிலிருந்து ஓடிவரும் கோயில் மலையாறு, புண்ணிய தீர்த்த நதி, அகரம் ஆறுகளில் தடுப்புச் சுவர் கட்டி, மண் அரிப்பைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புண்ணிய தீர்த்த நதி மற்றும் அகரம் ஆறுகளில் மண் அரிப்பைத் தடுப்பதற்கு தடுப்புச் சுவர் கட்டும் திட்டத்திற்கான ஆய்வு 1994-95-ஆம் ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்படும்

திரு கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதற்காக முதலில் எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஜவ்வாது மலையிலிருந்து ஓடிவரும் கோயில்மலையாறு, பாலாற்றில் வந்து கலக்கின்ற வரையில், 30 கிலோமீட்டர் தூரத்தில் ஏறத்தாழ 100 அடி ஆழத்திற்கு மண் அரிப்பை ஏற்படுத்துகிறது, இது காட்டாறு என்பதால். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக விரைவாக, அவர்கள் கூறியதுபோல் ஆய்வு செய்து மண் அரிப்பைத் தடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை மீண்டும் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் அரிப்பைத் தடுக்கின்ற திட்டம் ப்ளானிங் அன்ட் டிசைன்ஸ் டிப்பார்ட்மென்ட் மூலம் தலைமைப் பொறியாளர்